# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2019 யூலை

2019 யூலையில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேலும் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்து 55.7 கொண்ட பெறுமதிச் சுட்டெண் ஒன்றினைப் பதிவுசெய்தன. இது, 2019 யூனுடன் ஒப்பிடுகையில் 1.8 சுட்டெண் புள்ளிகளைக் கொண்டதொரு அதிகரிப்பாகும். தயாரிப்பு, கொள்வனவு முகாமைத்துவச் சுட்டெண்ணில் ஏற்பட்ட விரிவிற்கு புதிய கட்டளைகளிலும் அதனைத் தொடர்ந்து உற்பத்தியிலும், குறிப்பாக, உணவு மற்றும் குடிபானத் துறையின் தயாரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். புதிய கட்டளைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்பான இடையூறுகளிலிருந்து பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமையே காரணமாகும். அதேவேளை, யூலை மாதகாலப்பகுதியில் தொழில்நிலை மெதுவான வீதத்தில் அதிகரித்த போதும் புடவை மற்றும் ஆடை தொழில்துறையிலுள்ள பல பதிலிறுப்பாளர்கள் இம்மாத காலப்பகுதியில் தாம் உயர்ந்த வீத தொழிலாளர் புரள்வினை எதிர்நோக்கியமையினை முக்கியமாகக் குறிப்பிடுகின்றனர்.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **53.9** | **55.7** | **+** | **அதிகரிப்பு, உயர்ந்தவீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 53.0 | 59.0 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| உற்பத்தி | 56.5 | 57.5 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 55.5 | 52.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 51.5 | 57.0 | + | அதிகரிப்பு, உயர்ந்தவீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 51.0 | 50.0 | - | நடுத்தர அளவிலான கால நீடிப்பு |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகளின் விரிவாக்கம் மற்றும் உற்பத்தி அதேபோன்று எதிர்வரும் தேர்தல் காலத்தில் ஏற்படக்கூடிய தடங்கல்களை எதிர்கொள்ளும் விதத்தில் எடுக்கப்படுகின்ற முன்னெச்சரிக்கை வழிமுறைகள் என்பனவற்றின் காரணமாகவும் பண்டிகைக் கால கேள்விகளை பூர்த்திசெய்வதற்காகவும் கொள்வனவுகளின் இருப்பு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்கிறது. மேலும், நிரம்பலர்களின் விநியோகிக்கும் நேரம் நடுத்தரகால அளவொன்றுக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றமையானது முன்னைய மாதத்தினைப் போன்று அதே அளவு விநியோகக் காலத்தினை எடுத்துகாட்டுகின்றமைக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் நடைமுறைக்கிடப்பட்ட இறுக்கமான பாதுகாப்பு வழிமுறைகள் வழமையான நிலைமைக்கு திரும்பியமையே முக்கிய காரணமாகும்.

நடுநிலை மட்டத்தில் காணப்பட்ட நிரம்பலர் வழங்கல் நேரம் நீங்கலாக, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்து துணைச் சுட்டெண்களும் கீழ்மட்டமான 50.0 விஞ்சி (நடுநிலையான) ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை சமிக்ஞைப்படுத்தின.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**55.7**

2019 யூனுடன் ஒப்பிடுகையில் 1.8 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 யூனிலிருந்தான 0.1 சுட்டெண் கொண்ட வீழ்ச்சியுடன் 2019 யூலையில் 49.3 சதவீதம் கொண்ட பெறுமதியினைப் பதிவு செய்தது.

ஐக்கிய அமெரிக்கா மற்றும் யூரோ வலயம் என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு 2019 யூலையில் மெதுவடைந்தது. எனினும், ருசியா, சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் என்பனவற்றின் தயாரிப்பு கொ.மு.சு மேம்பட்ட வேளையில் ஐக்கிய இராச்சியத்தின் கொ.மு.சு மாற்றமின்றிக் காணப்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], ஓகத்து 15, 2019 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை 2019 யூலையில் தொடர்ந்தும் விரிவடைந்தமைக்கு புதிய வியாபாரங்கள்,** வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் 2019 யூனுடன் ஒப்பிடுகையில் விரைவாக விரிவடைந்தமை பக்கபலமாக அமைந்தன. இது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பணிகள் துறை மேலும் மீட்சியடைவதனை எடுத்துக்காட்டுகிறது.

மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், வதிவிட வசதிகள், உணவு மற்றும் குடிபானம் நிதியியல் பணிகள் மற்றும் போக்குவரத்து ஆகிய துணைத் துறைகளின் வியாபார நடவடிக்கைகள் 2019 யூலையில் தொடர்ந்தும் இரண்டாவது மாதமாக விரிவடைந்தன. பெரும்பாலான துணைத் துறைகள் முழுவதினதும் நடவடிக்கைகள் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றமையின் காரணமாக, பணிகளை வழங்குவோர் அடுத்த மூன்று மாதங்களில் வியாபாரத் தோற்றப்பாடு 29 மாதங்களிலேயே மிகஉயர்ந்த அளவிற்கு வலுவடையுமென எதிர்பார்க்கின்றனர். எனினும், வெற்றிடங்களை நிரப்புவதில் காணப்படும் காலதாமதம் மற்றும் தொழிலாளர் செறிவு மிக்க பணிகளுக்குப் பதிலாக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது என்பனவற்றின் காரணமாக முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தொழில் வாய்ப்புக்கள் தேய்வொன்றினைப் பதிவுசெய்திருக்கின்றன.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **53.1** | **57.1** | **+** | **அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 57.4 | 59.9 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 57.4 | 63.5 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 44.7 | 43.2 | - | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 44.1 | 47.7 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 61.8 | 71.4 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| | | **ஏனைய சுட்டெண்கள்** | | |
| விதிக்கப்பட்ட விலைகள் | 47.9 | 49.5 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புக்கள் | 63.4 | 66.3 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிதியியல் பணிகள் துணைத் துறையிலுள்ள பதிலிறுப்பாளர்கள் வைப்பு வீதக் குறைப்புகளுக்கு சமாந்தரமான விதத்தில் கடன் வழங்கல் வீதங்களை (விதிக்கப்பட்ட விலைகள்) தாம் குறைத்திருப்பதனை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இதன்படி, பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் 2019 யூலையில் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. அதேவேளை, எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவு வழமையான சம்பள அதிகரிப்புக்களின் காரணமாக 2019 யூலையில் உயர்ந்த வீதத்தில் அதிகரித்திருக்கின்றது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**57.1**

2019 யூனுடன் ஒப்பிடுகையில் 4.0 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இத்தாலியின் வளர்ச்சி வலுவடைந்தமையினதும் இந்தியா, பிரேசில் மற்றும் ருசியாவின் விரிவாக்கம் மீள ஏற்பட்டமையின் காரணமாக உலகளாவிய பணிகள் கொ.மு.சுட்டெண் 2019 யூனில் 51.9 இலிருந்து 2019 யூலையில் 52.5 இற்கு அதிகரித்து உலகளாவிய பணிகள் துறையின் வெளியீட்டின் விரிவாக்க வீதத்தில் ஏற்பட்ட மிதமான முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டியது.

யப்பான் மற்றும் சீனாவில் பணிகள் கொ.மு.சுட்டெண்களும் அவர்களின் பணிகள் துறைகள் 2019 யூனுடன் ஒப்பிடுகையில் யூலையில் மேம்பட்டமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: மார்க்கிட்[1], ஓகத்து 15, 2019 இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.